# பரீட்சகரின் அறிக்கை

## மட்டம் III பரீட்சை – 2020 யூலை

## (302) முகாமைத்துவக் கணக்கீடும் நிதியியலும்

**வினாத்தாள் பற்றிய கண்ணோட்டம் :**

இவ்வினாத்தாள் 100 புள்ளிகளை உள்ளடக்கி மூன்று பகுதிகளைக் கொண்டிருக்கிறது.

1. பகுதி **A** ஆனது 20 புள்ளிகளுக்காக நான்கு கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
2. பகுதி **B** ஆனது 30 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது.
3. பகுதி **C** ஆனது 50 புள்ளிகளுக்காக மூன்று கட்டாய வினாக்களை உள்ளடக்கியுள்ளது. - 15 புள்ளிகள், 10 புள்ளிகள், 25 புள்ளிகள்

**பொதுவான கருத்துக்கள் :**

இவ்வினாத்தாளுக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்திகரமானதாக இருந்தது. எவ்வாறாயினும், சில பொதுவான தவறுகளும் காணப்பட்டன.

**பகுதிரீதியான செயலாற்றுகை:**

**பகுதி A** ஆனது 20 புள்ளிகளுக்காக 4 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 1 | திருப்தியானது |
| 2 | திருப்தியில்லை |
| 3 | திருப்தியானது |
| 4 | நன்று |

**பகுதி B** ஆனது 30 புள்ளிகளுக்காக 3 கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 5 | நன்று |
| 6 | நன்று |
| 7 | நன்று |

**பகுதி C** ஆனது 50 புள்ளிகளுக்காக இரண்டு கட்டாய வினாக்களைக் கொண்டிருந்தது. இப்பகுதிக்கான பரீட்சார்த்திகளின் செயலாற்றுகை திருப்தியாக இருந்தது. இப்பகுதிக்கான வினா ரீதியான செயலாற்றுகை பின்வருமாறு:

| வினா இல. | செயலாற்றுகை மட்டம் |
|---|---|
| 8 | திருப்தியானது |
| 9 | திருப்தியானது |
| 10 | திருப்தியானது |

## பகுதி A

## வினா இல. 01

இவ்வினாவின் **பகுதி (a)** ஆனது முகாமைக் கணக்கீடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு நிறுவனம் ஒன்றின் முகாமைக் கணக்கீட்டினது இரண்டு அனுகூலங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது இலாபப் பகுப்பாய்வு / சமப்பாட்டுப் பகுப்பாய்வு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு சமப்பாட்டுப் புள்ளி – அலகுகளில் மற்றும் காப்பெல்லை – அலகுகளில் ஆகியவற்றைக் கணிப்பிடுமாறு பரீட்சார்த்திகள் கேட்கப்பட்டனர்.

**பொதுவான தவறுகள்:**

**பகுதி (a)** - சில பரீட்சார்த்திகள் வெறுமனே விடயங்களைக் குறிப்பிடுவதற்குப் பதிலாக விபரமான விடைகளை எழுதியிருந்தனர்.

- சில விடைகள் வினாவுக்குச் சம்பந்தமில்லாதவாறு வழங்கப்பட்டிருந்தன.

**பகுதி (b)** - சில பரீட்சார்த்திகள் குறைந்த அறிவு காரணமாக சமப்பாட்டுப் புள்ளி மற்றும் காப்பெல்லை ஆகியவற்றைச் சரியாகக் கணிப்பிடவில்லை.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவின் பகுதி (a) மற்றும் பகுதி (b) இற்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்த கால வினாத்தாள்களில் உள்ள இதுபோன்ற வினாக்களைச் செய்துபார்த்துப் பயிற்சி பெறவும்.
- எண்ணக்கருக்கள் பற்றிய தெளிவான எண்ணவோட்டங்களைப் பெற சுய கற்றல் புத்தகத்தைப் படிக்கவும்.

## வினா இல. 02

இவ்வினா பாதீட்டுக் கட்டுப்பாடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு நிறுவனமொன்றின் பாதீட்டுச் செயன்முறையின் இரண்டு நோக்கங்களை விபரிக்குமாறும், காசு மிகை காணப்படும் சந்தர்ப்பத்தில் ஒரு நிறுவனம் கடைப்பிடிக்க வேண்டிய இரண்டு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் சம்பந்தமற்ற விடைகளை எழுதியிருந்தனர். உதாரணமாக, அவர்கள் 'நீண்ட காலச் சொத்துக்களில் முதலீடு செய்தல், ஊழியர்களுக்கு நன்கொடை வழங்குதல்' போன்ற விடைகளை எழுதியிருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியாக இல்லை.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- தெளிவான கையெழுத்தில் எழுத முயற்சிக்கவும்.
- பாடத்துடன் தொடர்படைய கோட்பாட்டு அறிவை மேம்படுத்தவும்.

## வினா இல. 03

இந்த வினாவின் **பகுதி (a)** ஆனது தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தின் பிரயோகம் பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு தரப்பட்ட கம்பனியின் தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் கணிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

இவ்வினாவின் **பகுதி (b)** ஆனது, வியாபாரச் சென்மதி தீர்ப்பனவுக் காலத்தை மேம்படுத்துவதற்கு நிறுவனம் பயன்படுத்தக்கூடிய இரண்டு தந்திரோபாயங்களைக் குறிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

சில பரீட்சார்த்திகள் தொக்கு மற்றும் வியாபார வருமதிகளுக்கான உரிய நாட்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடுவதில் தவறு விட்டிருந்தனர். தொழிற்படு மூலதனச் சுற்றுக் காலத்தைக் கணிப்பிடும்போது சில பரீட்சார்த்திகள் செலுத்த வேண்டிய நாட்களைக் கழிப்பதற்குப் பதிலாகச் சேர்த்திருந்தனர். சில பரீட்சார்த்திகள் செய்முறைகளைக் காட்டவில்லை.

**செயலாற்றுகை: *இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கோட்பாட்டு ரீதியான விடைகள், விடைக்குப் பொருத்தமானதாகவும் தொடர்புடையதாகவும் இருத்தல் வேண்டும்.
- செய்முறைகள் தெளிவாகக் காட்டப்பட வேண்டும்.
- கடந்தகால வினாத்தாள்களில் இதே வகையான வினாக்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 04

இவ்வினா மீள்செலுத்துகைக் காலத்தைப் பயன்படுத்தி, புதிய முதலீடு ஒன்றின் செயற்றிட்ட மதிப்பீடு பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது. இங்கு தரப்பட்ட கம்பனிக்கான புதிய முதலீட்டுச் செயற்றிட்டத்தின் மீள்செலுத்துகைக் காலத்தைக் கணிக்குமாறும் செயற்றிட்டம் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டுமா என்பதைக் காரணங்களுடன் குறிப்பிடுமாறும் கேட்கப்பட்டது.

**பொதுவான தவறுகள்:**

- மீள்செலுத்துகைக் கால மாதங்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் சூத்திரத்தைப் பிழையாகப் பிரயோகித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் செயற்றிட்டமானது காசுப் பாய்வை நேர்மறையானதாக ஏற்றுக்கொள்ள வேண்டும் எனக் குறிப்பிட்டிருந்தனர்.

**செயலாற்றுகை: *இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- மீள் செலுத்துகைக் கால மாதங்களின் எண்ணிக்கையைக் கணிப்பிடுவது பற்றிக் கற்கவும்.
- பல பிரசினங்களைத் தீர்த்துப் பயிற்சி பெறுவதுடன் சுய கற்றல் புத்தகத்தையும் நன்கு படிக்கவும்.

## பகுதி B

### வினா இல. 05

இவ்வினா காசுப் பாதீடு பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இங்கு தரப்பட்ட மாதத்திற்கான காசுப் பாதீட்டைத் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் அவர்களால் பெற முடிந்திருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் தரப்பட்ட வீதாசாரத்தின்படி காசுப் பெறுவனவுகளைச் சரியாகக் கணித்து அறவிடமுடியாக் கடனாக 2% கழிப்பனவைச் செய்திருந்தனர். அவர்களிடம் காசுப் பெறுவனவுகளின் மொத்த வீதாசாரம் 98% என்பது பற்றிய எவ்வித எண்ணவோட்டங்களும் காணப்படவில்லை.
- சில பரீட்சார்த்திகள் கடன் கொடுப்பனவு ரூபா 250,000/- இற்கான நிதிச் செலவுகளை செம்மையாக்கம் செய்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் தேய்மானத்தைக் கழிக்காது முழு நிருவாகச் செலவுகளையும் எடுத்திருந்தனர். அவர்களிடம் காசுப் பாய்வுகள் மற்றும் காசுப் பாய்வுகள் அல்லாதவை ஆகியன பற்றிய எவ்வித எண்ணவோட்டங்களும் இல்லை.
- வினாவில் 2020 டிசெம்பர் மாதத்திற்கானதை மாத்திரம் செய்முறைகளுடன் தயாரிக்குமாறு கேட்கப்பட்டிருந்த போதிலும் சில பரீட்சார்த்திகள் அக்டோபர், நவெம்பர், டிசெம்பர் மற்றும் மொத்தம் ஆகிய நான்கு நிரல்களுடன் விடைகளைத் தயாரித்திருந்தனர். இது வினாவில் என்ன கேட்கப்பட்டுள்ளது என்பதை மாணவர்கள் சரியாக அடையாளங் காணவில்லை என்பதையே காட்டுகிறது.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- வினாவுக்கு விடையளிக்க முன் வினாவை நன்றாக விளங்கிக் கொள்ளவும்.
- கடந்தகால வினாத்தாள்களில் கூடுதலாக பயிற்சி பெறவும்.
- காசுப் பாய்வு மற்றும் காசுப் பாய்வு அல்லாதவை பற்றிய தெளிவான எண்ணவோட்டத்தைப் பெற்றுக்கொள்ளவும்.

### வினா இல. 06

இவ்வினா, கம்பனியானது வரையறைக் காரணியொன்றைக் கொண்டிருக்கும்போது உத்தம உற்பத்திக் கலவையை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிப் பரீட்சித்திருந்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் இவ்வினாவுக்கு விடையளித்திருந்ததுடன் முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

- அலகொன்றிற்கான மாறும் மேந்தலைகளைக் கணிப்பிடும்போது, சில பரீட்சார்த்திகள் திறனற்ற கூலி மணித்தியாலங்களை மாத்திரம் கருத்திற் கொண்டிருந்தனர்.
- வரையறைக் காரணியொன்றிற்கான பங்களிப்பினைக் கணிப்பிடுவதற்கு வரையறைக் காரணியாக அலகொன்றிற்கான திறனற்ற கூலி மணித்தியாலங்களைச் சில பரீட்சார்த்திகள் பயன்படுத்தி யிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் அலகொன்றிற்குத் தேவையான திறன்மிக்க கூலி மணித்தியாலங்களால் அலகுப் பங்களிப்பினை வகுப்பதற்குப் பதிலாக அதனைப் பெருக்கியிருந்தனர்.

- சொற்பளவான பரீட்சார்த்திகள் சூத்திரத்தைப் பயன்படுத்தித் தீர்ப்பதற்கு முயற்சித்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் அலகுப் பங்களிப்புக்குப் பதிலாக மொத்தப் பங்களிப்பைக் கணித்திருந்தனர்.

**செயலாற்றுகை: *இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை நன்று.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- விடையெழுத முன்னர் வினாவை நன்கு வாசித்து, விளங்கிக் கொள்ளவும்.
- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் அதிகம் பயிற்சி பெறவும்.

## வினா இல. 07

இவ்வினா சாதாரண பங்குகளின் கிரயம், மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம், மீட்கப்படத்தக்க தனிச்சங்களின் கிரயம் மற்றும் WACC ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்கான பரீட்சார்த்திகளின் ஆற்றலைப் பரீட்சித்தது. அதிகளவான பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ஆகியவற்றைச் சரியாகக் கணித்து முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

- அதிகளவான பரீட்சார்த்திகள் பிரதானமாக தனிச்சங்களின் கிரயத்தைக் கணிப்பிடுகையில் சரியான சூத்திரத்தைப் பிரயோகித்திருக்கவில்லை.
- சொற்பளவான பரீட்சார்த்திகள் சாதாரண பங்குகளின் கிரயம் மற்றும் மீட்கப்பட முடியாத முன்னுரிமைப் பங்குகளின் கிரயம் ஆகியவற்றைக் கணிப்பிடுவதற்கு சந்தை விலைக்குப் பதிலாக வழங்கிய விலையை எடுத்திருந்தனர்.
- தனிச்சங்களின் கிரயம் மீட்கப்பட முடியாத கடனாகக் கணிப்பிடப்பட்டது.
- WACC ஐக் கணிப்பிடும்போது சந்தை விலை கவனத்திற் கொள்ளப்படவில்லை.

**செயலாற்றுகை: *இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- கடந்தகால வினாத்தாள்களில் அதிகதிகமான பயிற்சிகளைச் செய்வதுடன் சுய கற்றல் புத்தகத்தையும் நன்கு படிக்கவும்.
- வினாவில் கேட்கப்பட்டதை நன்கு வாசித்து விளங்கிக் கொள்ளவும்.

# பகுதி C

## வினா இல. 08

இவ்வினா நேர் பொருள் விலை முரண், நேர் பொருள் கலவை முரண், நேர் பொருள் விளைவு முரண், நேர் கூலி விகித முரண் மற்றும் நேர் கூலி வினைத்திறன் முரண் ஆகியவற்றை எவ்வாறு கணிப்பிடுவது என்பது பற்றிய அறிவைப் பரீட்சித்திருந்தது.

**பொதுவான தவறுகள்:**

- அதிகளவான பரீட்சார்த்திகள் முரண்களைச் சரியாகக் கணிப்பிடவில்லை.
- சில பரீட்சார்த்திகள் சாதகமான மற்றும் பாதகமான நிலைமைகள் பற்றிப் பிழையாகக் குறிப்பிட்டிருந்தனர்.

- பல சந்தர்ப்பங்களில் முரண்களின் சரியான சூத்திரம் சரியாக எழுதப்பட்டிருந்த போதிலும், அதில் பிழையான எண் பெறுமானங்கள் பிரதியீடு செய்யப்பட்டிருந்தன.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- பரீட்சார்த்திகள் வேறுபட்ட விவரணங்களுக்கு முரண்களின் சூத்திரங்களைப் பயன்படுத்துவதில் பயிற்சி பெறுதல் வேண்டும்.
- சூத்திரத்தை நினைவில் வைத்துக் கொள்ளவும் சூத்திரத்திற்கு எண் பெறுமானங்களைப் பிரதியிடுவதற்காகவும் கடந்த கால வினாத்தாள்களிலுள்ள இதேபோன்ற வினாக்களில் அதிகம் பயிற்சி பெறவும்.

## வினா இல. 09

இவ்வினா NPV ஐப் பயன்படுத்தி புதிய செயற்றிட்டம் ஒன்றை மதிப்பிடுவது பற்றிப் பரீட்சித்திருந்தது. இங்கு வரிச் செம்மையாக்கங்களுடன்கூடிய NPV ஐக் கணிப்பிடுமாறும் முதலீட்டின் நிலைப்புத்தன்மையை மதிப்பிடுமாறும் கேட்கப்பட்டது. இது மிகவும் இலகுவான வினாவாக இருந்த போதிலும் சொற்பளவான பரீட்சார்த்திகள் மாத்திரமே முழுப் புள்ளிகளையும் பெற்றிருந்தனர்.

**பொதுவான தவறுகள்:**

- சில பரீட்சார்த்திகள் மூலதன விடுதொகைகளைச் சரியாகக் கணிப்பிட்டிருக்கவில்லை. அவர்கள் மூலதன விடுதொகைகளின் கணிப்பீட்டிற்காக முழுத் தொகையான ரூபா 32 மில்லியனை எடுத்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் முழுத் தொகையான ரூபா 32 மில்லியனை முதலீடாகவும் மேலதிக ரூபா 9 மில்லியனை தொழிற்படு மூலதனமாகவும் எடுத்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் செயற்றிட்டத்தின் முடிவில் மீளப்பெறக்கூடியதாக ரூபா 9 மில்லியன் தொழிற்படு மூலதனத்தை உள்ளடக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் NPV ஐக் கணிப்பிடும்போது காசுப்பாய்வாக இல்லாத தேய்மானத்தைக் கழிக்காது நிலையான கிரயத்தின் முழுத் தொகையையும் எடுத்திருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- விடையளிப்பதற்கு முன்னர் வினாவை நன்கு வாசித்து விளங்கிக்கொள்ளவும்.
- சுய கற்றல் புத்தகத்தை நன்கு திறம்படக் கற்பதுடன் அதிலுள்ள கணக்குகளையும் செய்து பார்க்கவும்.
- தரப்பட்ட விவரணத்திலுள்ள காசுப் பாய்வுகள் மற்றும் காசுப் பாய்வுகள் அல்லாதவற்றை நன்கு விளங்கிக் கொள்ளவும்.
- கடந்தகால வினாத்தாள்களிலுள்ள அதேபோன்ற வினாக்களில் பயிற்சி பெறவும்.

## வினா இல. 10

இந்த வினாவின் **பகுதி (a)** ஆனது செயன்முறைக் கிரயவியல் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இங்கு சமான அலகுக் கூற்றினையும் செயன்முறை 01 கணக்கையும் தயாரிக்குமாறு கேட்கப்பட்டது. அதிகளவான பரீட்சார்த்திகள் இப்பகுதிக்கான முழுப் புள்ளிகளையோ அல்லது கணிசமான புள்ளிகளையோ பெற்றிருந்தனர்.

இந்த வினாவின் **பகுதி (b)** ஆனது எதிர்பார்க்கப்பட்ட பெறுமானத்தின் அடிப்படையில் தீர்மானமெடுத்தல் பற்றிய அறிவைப் பரீட்சித்தது. இங்கு தரப்பட்ட கம்பனியினால் பயன்படுத்தப்படவுள்ள சந்தைப்படுத்தல் பிரச்சாரத்தை மதிப்பிடுமாறு கேட்கப்பட்டது.

சில பரீட்சார்த்திகள் இதில் காணப்பட்ட இரண்டு பகுதிகளில் ஒன்றிற்கு மாத்திரம் விடையளித்திருந்தனர். (பகுதி "a" அல்லது "b").

**பொதுவான தவறுகள்:**

**பகுதி (a):**

- சில பரீட்சார்த்திகள் சமான அலகுகளைக் கணிப்பிடும்போது சாதாரண நட்டத்தைக் கவனத்திற் கொண்டிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் அலகுக் கிரயத்தைக் கணிப்பிடும்போது நேர் பொருள் கிரயத்திலிருந்து சாதாரண நட்டத்தின் விற்பனைப் பெறுமதியைக் கழித்திருக்கவில்லை.
- சில பரீட்சார்த்திகள் செயன்முறைக் கணக்கை மாத்திரம் செய்திருந்ததுடன் வினாவில் தரப்பட்ட பொருள் கிரயம், நேர் கூலி மற்றும் மாறும் மேந்தலைத் தொகைகளை உட்படுத்தியிருந்தனர்.

**பகுதி (b):**

- சில பரீட்சார்த்திகள் எதிர்பார்க்கப்பட்ட விற்பனை விலையை நிகழ்தகவினால் பெருக்கியிருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் தீர்மானத்திற்கு வரும்போது மாறும் கிரயம், எதிர்பார்க்கப்பட்ட விற்பனைக்காகப் பிரயோகிக்கப்பட்ட நிகழ்தகவு மற்றும் கழிக்கப்பட்ட நிலையான கிரயம் ஆகியவற்றைத் தவிர்த்திருந்தனர்.
- சில பரீட்சார்த்திகள் மொத்த விற்பனைப் பெறுமதியை எடுத்து, மொத்த விற்பனை விலையிலிருந்து அலகொன்றிற்கான மாறும் கிரயம் ரூபா 1,150/- இனைக் கழித்து மொத்த எதிர்பார்க்கப்பட்ட விற்பனை அலகினால் பெருக்கியிருந்தனர்.

**செயலாற்றுகை:** ***இவ்வினாவுக்கான ஒட்டுமொத்தச் செயலாற்றுகை திருப்தியானது.***

**பரீட்சகரின் பரிந்துரைகள்:**

- எண்ணக்கரு பற்றிய தெளிவான எண்ணவோட்டத்தைப் பெற சுய கற்றல் புத்தகத்தையும் அதே போன்ற வேறு புத்தகங்களையும் படிக்கவும்.
- விடையெழுத முன் வினாவை நன்கு விளங்கிக் கொள்ளவும்.
- கடந்த கால வினாத்தாள்களிலும் சுய கற்றல் புத்தகத்திலுமுள்ள அதே போன்ற வினாக்களில் பயிற்சி பெறவும்.

- * * * -